ஆணையர் (வணிகவரிகள்)
8 - MAR 2023
எழிலகம், சென்னை - 600 005.

**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – வேலூர் கோட்டம் – திரு. லோ.விஷ்ணுதரன் என்பவர் கருணையடிப்படையில் 15.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

**வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை**

அரசாணை (டி) எண்.51

நாள்: 06.03.2023
சுபகிருது , மாசி–22,
திருவள்ளுவர் ஆண்டு, 2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. வேலூர் மாநிலவரி கோட்ட இணை ஆணையரின் செயல்முறைகள் ந.க. எண்.அ2/5290/ 2020, நாள் 09.12.2021.
3. கடலூர் வணிகவரி மாவட்ட துணை ஆணையரின் (மா.வ) (மு.கூ.பொ) செயல்முறைகள் ந.க.எண்.அ1/4962/2021, நாள் 13.12.2021.
4. கூடுதல் தலைமைச் செயலாளர் / வணிகவரி ஆணையரின் கடித எண்.ஒய்–3/2480724/ 2022, நாள் 30.05.2022.

*****

ஆணை:

பார்வை நான்கில் காணும் கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் அவர்கள், வணிகவரித் துறையின் வேலூர் வணிகவரி கோட்டம், விழுப்புரம்–1, உதவி ஆணையர் (மா.வ) அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்தபோது 25.05.2019 அன்று மறைந்த திரு. ப.லோகநாதன் என்பவரின் மகன் திரு. லோ.விஷ்ணுதரன் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 10.06.2020 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், விண்ணப்பம் மூன்றாண்டுகளுக்குள் பெறப்பட்டுள்ளது என்றும், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து சான்றுகள்/ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், மறைந்த அரசு ஊழியரின் மகன் திரு. லோ.விஷ்ணுதரன் என்பவர் பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தகுதியானவர் எனவும், இதன் காரணமாக மனுதாரரின் கோரிக்கை நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட இணை ஆணையர் (மா.வ), வேலூர் கோட்டம் அவர்களின் செயல்முறைகளின்படி திரு. லோ.விஷ்ணுதரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளதாவும், இதன் தொடர்ச்சியாக, தனியர் 15.12.2021 முற்பகல் முதல் துணை ஆணையர் (மா.வ), கடலூர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப்

பணிபுரிந்து வருவதாகவும், தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பணித்தரத்தில், தனியர் பணியில் சேர்ந்த நாளான 15.12.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே நான்கில் படிக்கப்பட்ட வணிகவரி ஆணையரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்து, வணிகவரித் துறையில், வேலூர் வணிகவரி கோட்டம், விழுப்புரம்-1, உதவி ஆணையர் (மா.வ) அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்தபோது 25.05.2019 அன்று மறைந்த திரு. ப.லோகநாதன் என்பவரின் மகன் திரு. லோ.விஷ்ணுதரன் என்பவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரித் துறையில், துணை ஆணையர் (மா.வ), கடலூர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டதை தனியர் பணியில் சேர்ந்த நாளான 15.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணித்தரத்தில், அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப் படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.193/ட்டி-1/2023-1, நாள் 20.01.2023 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.4139880/ஜி.1/2023, நாள் 22.02.2023 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

பெறுநர்:
திரு. லோ.விஷ்ணுதரன், இளநிலை உதவியாளர்,
துணை ஆணையர் (மா.வ), கடலூர்.
(முதன்மை செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக).
முதன்மை செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மை செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக)

நகல்:
இணை ஆணையர் (மாநிலவரி), வேலூர் கோட்டம்.
(முதன்மை செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக).
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை - 9.
அரசுச் செயலாளரின் தனிச் செயலர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

7/3/2023
பிரிவு அலுவலர்